# வளர் தமிழ் ஆய்வு

யாதும் ஊரே
யாவரும் கேளிர்

பதிப்பாசிரியர்கள்

சி. மைக்கேல் சரோஜினி பாய்

ப. பத்மநாப பிள்ளை

வ. இராசரத்தினம்

வளர் தமிழ் ஆய்வு மன்றம்

திண்டுக்கல்

2018

**ISBN NO : 978-81-920884-7-1**

| | | |
|---|---|---|
| நூற்பெயர் | : | வளர் தமிழ் ஆய்வு<br>(கட்டுரைத் தொகுப்பு) |
| பதிப்பாசிரியர்கள் | : | சி. மைக்கேல் சரோஜினி பாய்<br>ப. பத்மநாப பிள்ளை<br>வ. இராசரத்தினம் |
| முதற் பதிப்பு | : | மே 2018 |
| தாள் | : | **18.6** மேப் லித்தோ |
| அளவு | : | டெம்மி |
| அச்சுரு | : | பாமினி 10 புள்ளி |
| பக்கம் | : | **x + 318** |
| விலை | : | ரூபாய் **500/-** |
| அச்சகம் | : | சூர்யா பிரிண்ட் சொலூசன்ஸ்<br>சிவகாசி |
| உரிமை | : | பதிப்பாசிரியர்களுக்கு |
| வெளியீடு | : | வளர் தமிழ் ஆய்வு மன்றம்<br>பூங்குன்றன் பள்ளி வளாகம்<br>விவேகானந்தா நகர்<br>திண்டுக்கல் - 624 001<br>தமிழ்நாடு<br>தொ.பே. 0451-2427458 |

116. அ.ராஜன்
'இனக்குழு வழிபாட்'டில் நிறுவனம் சார் மரபும் நிறுவனம் சாரா மரபும்: அரிச்சந்திரன் கதையாடலை முன் வைத்து... 183

117. ராஜம்
விளையாட்டுத் துறையில் மாணவிகளின் முன்னேற்றத்திற்கான அடிப்படைகள் 186

118. பெ.ராஜா
நெய்தல் நிலமும் தமிழர்களின் பண்பாடும் 190

119. எம்.ரேணுகா
பெரிய புராணத்தில் தொண்டும் அன்பும் 195

120. லட்சுமி கார்மேகம்
தமிழ்மொழிப் பயன்பாட்டில் கூகுள் ஒலி எழுத்து மாற்றியின் பங்களிப்பு 200

121. கி.லட்சுமி நாராயணன்
பாவேந்தருக்குப் பின் தமிழ்க் கவிதையில் நேர்ந்த தேக்கம் 204

122. க.லதா
சங்க இலக்கியங்களில் பரதவர் வாழ்வியல் 207

123. ப.லதா
செப்புப் படிமக் கலை 211

124. ப.லிங்கம்
திருக்குறளில் மழையும் வேளாண்மையும் 214

125. ஜீ. லெட்சுமிபிரியா
அக்கினி சாட்சி கூறும் பெண்களின் பிரச்சினைகள் 218

126. சு.லோகிதா
சித்தர் இலக்கியத்தின் அமைப்பு முறை 223

127. சை.வஹிதா கௌசிகா
பெண் கவிஞர்களின் கவிதைகளில் நனவிலிக் கூறுகள் 227

128. மு.வசந்த் பாண்டியன்
கள்ளி நாவல் காட்டும் தலித்களின் வாழ்வியல் பிரச்சினைகள் 233

129. சி.வத்சலா லட்சுமி நாராயணன்
சங்க காலத்தில் பயிரிடும் முறை 238

130. வாசுகி ஜெயரத்னம்
குங்குமம் தோழியின் நடப்பியல் போக்கு 243

# சங்க இலக்கியங்களில் பரதவர் வாழ்வியல்

குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் எனும் நால்வகை நிலங்களில் வாழ்ந்த பண்டைத் தமிழருள் நெய்தல் நிலத்து வாழ்ந்த பரதவர்களின் வாழ்வு பிறரிடமிருந்து வேறுபட்டது. இதற்குக் காரணம் அவர்கள் வாழ்ந்த நிலப் பகுதியே. நெய்தல் நில மக்களின் உணவு முதல் விருந்தோம்பும் பண்பு, உடை, அவர்களின் வாழிடம், திருவிழாக்கள் என அனைத்தும் பிற நிலத்து மக்களிடமிருந்து வேறுபடுகிறது இதனைச் சங்க இலக்கியங்கள் வெளிபடுத்தும் விதத்தை இக்கட்டுரை வெளிப்படுத்துகிறது.

மனிதனின் அடிப்படைத் தேவைகள் மூன்றனுள் முதன்மையானது உணவு உணவையும் உடையையும் இருப்பிடத்தையும் இயற்கையிலிருந்து எவ்வாறு பெற்று நுகர்கிறது என்பதைப் பொறுத்து ஒரு மனித இனத்தின் நாகரிகப் படிநிலையைக் கணிக்கமுடியும் என்பார் ராஜ்கௌதமன் (ப. 198, பாட்டும் தொகையும் தொல்காப்பியமும் தமிழ்ச் சமூக உருவாக்கமும்).

**நெடுந்திமில் தொழிலொடு வைகிய தந்தைக்கு**
**உப்பு நொடை நெல்லின் மூரல் வெண்சோறு**
**அயிலை துழந்த அம்புளிச் சொரிந்து**
**கொழுமீன் தடியொடு குறுமகள் கொடுக்கும்**

**(அகம். 40)**

இவ்வடிகள் கடற்சூழலில் இயைந்து வாழும் பரதவரின் உணவுப் பழக்கத்தையும் பண்டமாற்றினையும் ஒருங்கே விளக்குகின்றன. பட்டினப்பாலையும் நெய்தல் நில மக்களின் உணவு பற்றி,

**கடலிறவின் சூடு தின்றும்**
**வயலாமைப் புழுக்குண்டும்... (பட்டின. 63-64)**

என்று குறிப்பிடுகிறது. வயலில் கிடைக்கும் ஆமைகளை புழுக்கியும் (வேக வைத்தும்) கடலில் கிடைக்கும் இறாலினைச் சுட்டும் உண்ட செய்தி இங்கு புலப்படுகிறது. சிறுபாணாற்றுப்படையிலும் (156-163) பழந்தேறலையும் குழல் மீனின் சூட்டிறைச்சியையும் பாணர்கள் பெற்ற செய்தி குறிப்பிடப்படுகிறது.

விருந்தினர்க்கென்று பரதவ மக்கள் தனித்த உணவு வகைகளைக் கொடுத்து மகிழ்ந்த செய்தியையும் சங்க இலக்கியங்கள் பதிவு செய்துள்ளன. கொக்கின் நகம் போன்ற வெண்மையான சோற்றினை விருந்தினர்க்குக் கொடுத்து உண்பித்த செய்தியை நற்றிணை 258வது பாடலில் காணமுடிகிறது. அது போலவே, பெரும்பாணாற்றுப்படையில் பரதவ இன மக்கள் விருந்தினரை உண்பித்த செய்தியை,

**ஈர்ஞ்சோறு சூடிய இரும்பல் குட்டிப்**
**பல்மயிர்ப் பிணவொடு பாயம் போகாது**
**நெல்மா வஞ்சி தீற்றிப் பல நாள்**

---

**முனைவர் க. லதா,**
**பாத்திமா கல்லூரி, மதுரை.**